SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

மட்டம் III பரீட்சை – ஜனவரி 2025

(Level III Examination – January 2025)

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(301) நிதி அறிக்கையிடல் (FAR)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
மட்டம் III பரீட்சை – ஜனவரி 2025
(301) நிதி அறிக்கையிடல்
பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

நான்கு (04) கட்டாயவினாக்கள்
(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி - A

வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 01

(a)
(1) எண்ணியலாக்கம் மற்றும் தன்னியக்கப்படுத்தல்
(2) பூகோளமயமாக்கல்
(3) வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் அறிக்கையிடல் நியமங்களிலான மாற்றங்கள்
(4) புதிய ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள்.
(5) அக்கறையுள்ள தரப்பினர்களின் எதிர்பார்ப்புகளிலான மாற்றங்கள். (உ-ம்: நிலைபேறானதன்மை அறிக்கையிடல் மற்றும் ESG வெளிப்படுத்தல்கள்)
(6) வணிகத்தின் சிக்கலான தன்மை
(7) தொலைதூர ஊழியப்படை
(8) ஒருங்கிணைந்த அறிக்கையிடல்

(03 புள்ளிகள்)

(b)
(1) வரலாற்றுக் கிரயம்
(2) சீர்மதிப்பு (நியாயமான பெறுமதி)
(3) தற்போதைய பெறுமதி
(4) பயன்பாட்டில் உள்ள பெறுமதி மற்றும் தீர்ப்பனவுப் பெறுமதி
(5) தற்போதைய கிரயம் (நடைமுறைக் கிரயம்)

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 01

(a) நிலைபேறானதன்மை அறிக்கையிடலின் முக்கிய நோக்கமானது, ஒரு நிறுவனத்தின் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) செயற்திறன் பற்றிய வெளிப்படையான மற்றும் முற்றடக்கமான தகவல்களை அக்கறையுள்ள தரப்பினருக்கு வழங்குவதாகும். நிதி செயற்திறனுடன் நிதியல்லாத அம்சங்களை வெளிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் நீண்டகாலப் பெறுமதி உருவாக்கம், சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை மதிப்பிட இது உதவும்.

(02 புள்ளிகள்)

(b)
- தந்திரோபாயக் கவனம் மற்றும் எதிர்கால நோக்குநிலை
- தகவலின் தொடர்பிணைப்பு
- பொருண்மை
- அக்கறையுள்ள தரப்பினர் உறவுமுறைகள்.
- சுருக்கத்தன்மை
- நம்பகத்தன்மை மற்றும் முழுமைத்தன்மை
- உள்ளடக்கம் மற்றும் ஒப்பீடு

(03 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 04

(a)
- **மொத்த இலாப விகிதம்:**
  - விற்பனை விலைகளை அதிகரித்தல்.
  - சிறந்த வழங்குனர் பேரம்பேசல்கள் மூலம் விற்கப்பட்ட பொருட்களின் கிரயத்தைக் குறைத்தல்.
  - பாரிய அளவிலான கொள்வனவுகள்.
  - உற்பத்தி வினைத்திறன்.
- **கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்:**
  - கடுமையான கடன் கொள்கைகளை அமுலாக்குதல்.
  - தாமதமான விற்பனைப் பட்டடியல்கள் மீதான பின்தொடர்தலை மேம்படுத்துதல்.
  - வாடிக்கையாளர்களுக்கு முன்கூட்டியே பணம் செலுத்தும் போதிலான கழிவுகளை வழங்குதல்.

(02 புள்ளிகள்)

(b)
(1) நிதிக் கூற்றுக்களில் கிடைக்கும் விபரங்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டதுடன், சந்தையில் பணவீக்கத்தின் தாக்கத்தைக் கருத்தில் கொள்வதில்லை.

(2) கடந்த கால பொருளாதார நிலை, வணிக சூழல் மற்றும் அகக் காரணிகள் நிலையானவை எனவும், மாறும் தன்மை அற்றவை அல்ல என்ற உண்மையைப் புறக்கணித்து, வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் எதிர்கால விடயங்கள் குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(3) சில விகிதங்கள் நிதி அறிக்கையிடல் திகதியில் நிலவும் நிலைமை மற்றும் எண்களை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும், இந்த எண்கள் ஆண்டு முழுவதும் நிலையானவையாக இருப்பதில்லை.

(4) நிறுவனங்களுக்கிடையேயான விகிதங்களை ஒப்பிடும் போது வெவ்வேறு வணிக நிறுவனங்களின் கணக்கியல் கொள்கைகளில் வேறுபாடுகளைப் பின்பற்றுவதனால் அவை ஒப்பீட்டை கடினமாக்குகின்றன.

(5) வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட கையாளல்கள் (சாளர அலங்காரம்) நிதிக் கூற்றுக்களில் பிரதிபலிக்கப்படலாம்.

(6) தொழிற்துறைகளுக்கு இடையே விகிதங்கள் கணிசமாக வேறுபடுவதனால் வெவ்வேறு துறைகளில் உள்ள நிறுவனங்களை ஒப்பிடுவது கடினமானதாகும்.

(7) சந்தை நிலைமைகள், முகாமையின் வினைத்திறன் மற்றும் பண்டக்குறி நற்பெயர் போன்ற நிதியல்லா அம்சங்கள் விகிதப் பகுப்பாய்வில் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

(03 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 02

1. சந்தை ஆராய்ச்சி செலவு (ரூ. 2 மில்லியன்)

விளக்கம்:

LKAS 38 நியமத்தின் படி, ஆராய்ச்சிக் கட்டத்தின் போது ஏற்படும் செலவுகள் செலவினமாக ஏற்பிசைக்கப்பட வேண்டுமேயன்றி, அவற்றை ஒரு அருவச் சொத்தாக மூலதனமாக்க முடியாது. சந்தை ஆராய்ச்சியானது ஆராய்ச்சி கட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுவதுடன், எதிர்காலப் பொருளாதார நன்மைகள் மூலதனமாக்கப்படுவதற்கான மூலப்பிரமாணங்களை அது பூர்த்தி செய்யவில்லை.

முடிவு:
ஒரு அருவச் சொத்தாக ஏற்பிசைக்க முடியாது.

2. ஆக்கவுரிமை பதிவு செலவு (ரூ. 75,000)

விளக்கம்:

LKAS 38 நியமம் ஆக்கவுரிமைகள் போன்ற சட்ட உரிமைகளைப் பெறுவதற்கு நேரடியாக ஏற்படும் செலவுகள் அடையாளம் காணக்கூடிய தன்மை மற்றும் எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும் திறன் ஆகியவற்றின் அளவுகோல்களை பூர்த்தி செய்வதன் காரணமாக அவற்றை ஒரு அருவமான சொத்தாக ஏற்பிசைக்க அனுமதிக்கிறது.

முடிவு:
ஒரு அருவச் சொத்தாக ஏற்பசைக்கப்படும்.

3. முகாமையாளர்களுக்கான பயிற்சி செலவு (ரூ. 10 மில்லியன்)
விளக்கம்:
பயிற்சியளித்தல் காரணமாக, ஊழியர்களின் செயற்திறன் அதிகரிக்கும்.

முடிவு:
ஒரு அருவச் சொத்தாக ஏற்பிசைக்கப்படவில்லை.

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி A முடிவு

வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அத்தியாயம் 3.2.

சூரியா (பிரைவேட்) லிமிடெட்
மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான
காசுப்பாய்ச்சல் கூற்று

தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்	
வரிக்கு முன் நிகர இலாபம் *(செய்கை 1)*	3,450,000
சீராக்கங்கள்	
ஆதனம், பொறி, உபகரணங்களின் தேய்மானம் [2900- (2400-700)]	1,200,000
பணிக்கொடை ஏற்பாடு	120,000
சொத்து முடிவுறுத்தல் நட்டம் / (இலாபம்)	(200,000)
வட்டி செலவினம்	1,000,000
தொழிற்படுமூலதன மாற்றங்களுக்கு முன்னான தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**5,570,000**
தொழிற்படு மூலதன மாற்றங்கள்	
இருப்புகளின் அதிகரிப்பு	(11,800,000)
வியாபார மற்றும் பிற வருமதிகளிலான குறைவு	12,865,000
வியாபார மற்றும் பிற சென்மதிகளிலான குறைவு	(2,420,000)
தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு	**4,215,000**
பணிக்கொடை செலுத்துகை	(80,000)
வருமான வரி செலுத்துகை	(870,000)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான நிகர காசு	**3,265,000**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு	
ஆதனம், பொறி, உபகரணங்களின் கொள்வனவு	(2,100,000)
ஆதனம், பொறி, உபகரணங்களின் முடிவுறுத்தல் வருமானம்	200,000
	(1,900,000)
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	
ஆண்டின்போது செலுத்தப்பட்ட கடன்கள்	(2,600,000)
ஆண்டின்போது பெறப்பட்ட நீண்டகாலக் கடன்	2,000,000
வட்டி செலுத்துகை	(685,000)
பங்கிலாப செலுத்துகை	(230,000)
நிதி நடவடிக்கைகளில் உருவான நிகர காசு	**(1,515,000)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான நிகர மாற்றம்	(150,000)
ஆண்டு ஆரம்பக் காசு மற்றும் காசுக்கு சமமானவை	2,200,000
ஆண்டு இறுதிக் காசு மற்றும் காசுக்கு சமமானவை	**2,050,000**

aat SRI LANKA

செய்கை 1: வரிக்கு முன்னான இலாபம் / (நட்டம்)

வரிக்குப் பின் இலாபம்	2,730,000
வரி	720,000
வரிக்கு முன் இலாபம்	3,450,000

செய்கை 2

நீண்டகாலக் கடன் கணக்கு

காசு	2,600,000	மீதி முன் கொண்டு வந்தது	6,000,000
		புதிய கடன்	2,000,000
மீதி முன் கொண்டு சென்றது	5,400,000		
	8,000,000		**8,000,000**

செய்கை 3

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

மீதி முன் கொண்டு வந்தது	20,100,000	முடிவுறுத்தல்	700,000
காசு	2,100,000		
		மீதி முன் கொண்டு சென்றது	21,500,000
	22,200,000		**22,200,000**

பணிக்கொடை ஏற்பாட்டக் கணக்கு

காசு	80,000	மீதி முன் கொண்டு வந்தது	350,000
		பணிக்கொடை (இலாபநட்டம்)	120,000
மீதி முன்கொண்டு வந்தது	390,000		
	470,000		**470,000**

செலுத்த வேண்ளடிய வட்டிக் கணக்கு

காசு	685,000	மீதி முன் கொண்டு வந்தது	120,000
		இலாபநட்டக் கணக்கு	1,000,000
மீதி முன்கொண்டு வந்தது	435,000		
	1,120,000		**1,120,000**

பகிரப்படாத இலாபக் கணக்கு

காசு	230,000	மீதி முன் கொண்டு வந்தது	4,100,000
		இலாபநட்டக் கணக்கு	2,730,000
மீதி முன் கொண்டு சென்றது	6,600,000		
	6,830,000		**6,830,000**

ஆதனம், பொறி, உபகரண முடிவுறுத்தல் கணக்கு

கிரயம்	700,000	திரண்ட பெறுமானத் தேய்வு	700,000
		காசு	200,000
இலாபநட்டக் கணக்கு	200,000		
	900,000		**900,000**

செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கு

காசு	870,000	மீதி முன் கொண்டு வந்தது	150,000
		இலாபநட்டக் கணக்கு	720,000
	870,000		**870,000**

திரண்ட பெறுமானத் தேய்வுக் கணக்கு

ஆதனம், பொறி, உபகரண அகற்றல்	700,000	மீதி முன் கொண்டு வந்தது	2,400,000
		இலாபநட்டக் கணக்கு	1,200,000
மீதி முன் கொண்டு சென்றது	2,900,000		
	3,600,000		**3,600,000**

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அத்தியாயம் 2.10 மற்றும் 2.16

(a) குறுங்கால ஊழியர் பயன்கள் என்பது ஒரு நிறுவனத்தினால் அதன் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற, ஊழியர்கள் தொடர்புபட்ட சேவையினை வழங்கிய காலப்பகுதியின் முடிவிலிருந்து 12 மாதகாலத்தினுள் செலுத்தித்தீர்க்க எதிர்பார்க்கும் நன்மைகள் ஆகும்.

உதாரணங்களாவன:

- சம்பளங்கள் மற்றும் கூலிகள்: மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு மற்றும் வெகுமதிக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலான, 12 மாதத்தினுள் செலுத்தப்பட வேண்டிய வழக்கமான கொடுப்பனவுகள்.
- காசாக செலுத்தப்படும் வருடாந்த விடுமுறைகள் மற்றும் சுகயீன விடுமுறைகள்: அடுத்துவரும் 12 மாதத்தினுள் பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படும் விடுமுறைக்கான உரித்துக்கள் (வருடாந்த விடுமுறை மற்றும் சுகயீன விடுமுறைகள்)
- காசாக செலுத்தப்படும் பிரசவ காலத் தாய்க்கான விடுமுறை / தந்தைக்கான விடுமுறை
- தற்போதுள்ள ஊழியர்களுக்கான மருத்துவ விடுமுறை, வீட்டுவசதி, மகிழுந்து மற்றும் போக்குவரத்து வசதி அல்லது பொருட்கள் சேவைகளிலான கழிவிட்ட விலைகள்

(04 புள்ளிகள்)

aat SRI LANKA

(b) (i)

குத்தகை வருமதிக் கணக்கு			
இருப்பு விற்பனை	6,800,000	காசு	2,000,000
		காசு	1,534,934
உழைக்கப்படாத வருமானம்	2,874,670		
		மீதி. மு. கொ. செ	6,139,736
	9,674,670		**9,674,670**

(04 புள்ளிகள்)

(ii)

உழைக்கப்படாத வருமானக் கணக்கு			
வட்டி வருமானம் (இலாபநட்ட)	864,000	குத்தகை வருமதி	2,874,670
மீதி. மு. கொ. செ	2,010,670		
	2,874,670		**2,874,670**

செய்கைகள்:

மொத்த முதலீடு (1,534,934 x 5) + 2,000,000 = 9,674,670

ஆண்டு	முன்கொண்டு வந்த மீதி	தவணைக் கட்டணம்	வட்டி	மூலதனம்	முன்கொண்டு சென்ற மீதி
1	4,800,000	1,534,934	864,000	670,934	4,129,066
2	4,129,066	1,534,934	742,232	791,702	3,337,363
3	3,337,364	1,534,934	600,725	934,208	2,403,155
4	2,403,155	1,534,934	432,568	1,102,366	1,300,789
5	1,300,789	1,534,934	234,142	1,300,790	-

SRI LANKA

(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 07ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 2.13 மற்றும் 2.11

(a) (1) ரூபா 1,000,000 நட்ட ஈடு கோரி வாடிக்கையாளரால் தொடரப்பட்ட வழக்கு

பகுப்பாய்வு:

LKAS 37 நியமத்தின் படி, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்போது ஒரு ஏற்பாடு ஏற்பிசைக்கப்படும்:

- கடந்தகால நிகழ்வுகள் காரணமாக ஒரு நிகழ்காலக் கடப்பாடு காணப்படல்.
- பொருளாதார வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் காணப்படல்.
- தொகை நம்பகமான முறையில் மதிப்பிடத்தக்கதாக இருத்தல்.

இந்த வழக்கில், நிறுவனத்தின் வழக்கறிஞர் கட்டணம் செலுத்தப்படுவதற்கான நிகழ்தகவு குறைந்த இருப்பதாகக் கூறுவதன் அடிப்படையில், ஒரு ஏற்பாட்டினை ஏற்பிசைப்பதற்கான மூலப்பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.

கையாள்கை

இது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் ஒரு உறுமுரிமைப் பரிப்பாக, கட்டணம் செலுத்தப்படுவதற்கான நிகழ்தகவு குறைவாகவுள்ளது என்ற மதிப்பீட்டோடு உரிமைகோரலின் தன்மை மற்றும் தொகையை விளக்கி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(2) ஏப்ரல் 10, 2024 அன்று இறுதிப் பங்கிலாபப் பிரகடனம்

பகுப்பாய்வு:

அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு அறிவிக்கப்பட்ட பங்கிலாபம் மார்ச் 31, 2024 வரை இருந்த நிலைமைகளை பாதிக்காது ஆகையால், LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) நியமத்தின் படி சீராக்கம் அவசியமற்ற நிகழ்வுகளாகக் கருதப்படுகிறது.

கையாள்கை

மார்ச் 31, 2024 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு பரிப்பு அல்லது ஏற்பாடு ஏற்பிசைக்கப்படாது. இருப்பினும், அறிக்கைகளில் ஒரு இறுதி பங்கிலாபம் அறிவிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் குறிப்புகளில் ஒரு வெளிப்படுத்தல் தேவைப்படுகிறது.

(3) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுமதிக்கப்படாத செலவினங்கள் ரூபா 1.5 மில்லியன்

பகுப்பாய்வு:

மார்ச் 31, 2024 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வரிவிதிப்பு வருமானத்தை இந்த அனுமதிக்கப்படாத ரூபா 1.5 மில்லியன் பாதிக்கும், ஆனால் வரி மதிப்பீடு ஏப்ரல் 30, 2024 அன்றே நிறைவு செய்யப்பட்டுவிட்டது. இந்த நிகழ்வு ஆண்டு முடிவில் குறைத்து மதிப்பிடப்பட்ட வரிச் செலவு மற்றும் பரிப்புக்கான சான்றுகளை வழங்குகிறது. இது LKAS 10 நியமத்தின்படி சீராக்கும் நிகழ்வாகும்.

வரித் தாக்க கணிப்பீடு:

அனுமதிக்கப்படாத செலவு ரூ. 1.5 மில்லியன் மேலதிக வரி விதிக்கக்கூடிய வருமானத்தை விளைவாகத்தரும். கூட்டுவணிகவரிவீதம் 30% என்று கருதப்படுகிறது:

மேலதிக வரி பரிப்பு = 1,500,000 x 30% = 450,000

கையாள்கை:

மேலதிக வருமான வரிப் பரிப்பு ரூபா. 450,000 இனை ஏற்பிசைத்து, மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வரிச் செலவினத்திற்கான வருமான அதிகரிப்பு சீராக்கப்படல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(b) (i) LKAS 23: கடன்படுகைக் கிரயம் நியமத்தின்படி "தகுதிகாண் சொத்து" பற்றிய விளக்கம்: ஒரு தகுதிகாண் சொத்து என்பது அதன் நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராகுவதற்குக் கணிசமான காலத்தை எடுக்கத்தக்க ஒரு சொத்து ஆகும்.

தகுதிகாண் சொத்துக்களுக்கான உதாரணங்கள்:

- ஒரு கட்டடத்தின் அல்லது உற்பத்திப் பொறியின் கட்டுமானம்.
- நெடுஞ்சாலைகள், பாலங்கள் அல்லது மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள்.
- நீண்ட விருத்திக் காலம் அவசியமான பாரிய உற்பத்தி வரிசைகள் அல்லது உள்நாட்டில் உருவாக்கப்படும் மென்பொருள்.
- இருப்புகள்.

- அருவச் சொத்துக்கள்.
- முதலீட்டு ஆதனங்கள்.
- தாங்கு பொறிகள்.

(03 புள்ளிகள்)

(ii) கடன்படுகைக் கிரயங்களின் மூலதனமாக்கலை ஆரம்பிப்பதற்கான நிபந்தனை:

LKAS 23 நியமத்தின் படி, கடன்படுகைக் கிரயங்களின் மூலதனமயமாக்கல் ஆரம்பிப்பது பின்வருவன கிகழ்கின்ற போதாகும்:

- தகமைகாண் சொத்து மீதான செலவுகள் ஏற்படுதல்.
- கடன்படுகைக் கிரயங்கள் ஏற்படுதல்.
- சொத்தை அதன் நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாரப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் இடம்பெறுதல்.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி **B** முடிவு*

SRI LANKA

மூன்று (03) கட்டாயவினாக்கள் (மொத்தம் 50 புள்ளிகள்)	பகுதி -C

வினா 08ற்கானபரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அத்தியாயம் 03

(a)

சேவ் வீல் பி.எல்.சி.
மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான
இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று

			ரூபா
வருமானம்	**1**		317,000,000
கழி: விற்பனைக் கிரயம்	**2**		(161,000,000)
மொத்த இலாபம்			**156,000,000**
ஏனைய வருமானம்	**3**		18,280,000
கழி: செலவினங்கள்			
நிர்வாக செலவுகள்	**4**	(77,420,000)	
விநியோக செலவுகள்	**5**	(36,400,000)	
நிதி செலவு	**6**	(2,375,000)	(116,195,000)
வரிக்கு முன் இலாபம் / (நட்டம்)			**58,085,000**
ஏனைய முற்றடக்க வருமானம்			
பிற செலவுகள் - சேத இழப்பு நட்டம்	**7**	(2,000,000)	
ஆண்டிற்கான இலாபம்			**56,085,000**
வருமான வரி நன்மை / (செலவு)			(12,450,000)
வரிக்குப் பின்னான இலாபம்			**43,635,000**
ஏனைய முற்றடக்க வருமானம்			**-**
ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்			**43,635,000**

(10 புள்ளிகள்)

(b)

சேவ் வீல் பி.எல்.சி.
மார்ச் 31, 2024 அன்று உள்ளவாறான
நிதிநிலைமைக் கூற்று

			ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்			146,030,000
மூலதனக் குறைவேலை			100,625,000
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்			**246,655,000**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புகள்		94,000,000	
வியாபார வருமதிகள்		87,780,000	
வருமதி வட்டி		250,000	
முன்செலுத்திய செலவினங்கள்		2,700,000	
கையிலுள்ள காசுமீதி		38,000,000	
மொத்த நடைமுறை சொத்துக்கள்			**222,730,000**
மொத்த சொத்துக்கள்			**469,385,000**
உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்			
உரிமையாண்மை			
கூறப்பட்ட மூலதனம்		300,000,000	
நிறுத்திவைத்த உழைப்பு		79,635,000	
மொத்த உரிமையாண்மை			**379,635,000**
நடைமுறையல்லா பரிப்புக்கள்			
நீண்ட கால கடன்	**8**	40,000,000	
மொத்த நடைமுறையல்லா பரிப்புக்கள்			**40,000,000**
நடைமுறைப் பரிப்புக்கள்			
நீண்டகாலக் கடன்	**8**	10,000,000	
வங்கி மேலதிகப் பற்று		12,000,000	
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்		24,000,000	
செலவின நிலுவைகள் (800,000 + 500,000)		1,300,000	
சென்மதியாகவுள்ள வருமான வரி		2,450,000	
மொத்த நடைமுறைப் பரிப்புக்கள்			**49,750,000**
மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்			**469,385,000**

(08 புள்ளிகள்)

aat SRI LANKA

(c)

சேவ் வீல் பி.எல்.சி.
மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான
உரிமை மாற்றங்களின் கூற்று

	கூறப்பட்ட மூலதனம் ரூபா	**நிறுத்திவைத்த இலாபம் ரூபா**	**மொத்த உரிமையாண்மை ரூபா**
ஏப்ரல் 1, 2023 அன்றுள்ள மீதி	300,000,000	51,000,000	351,000,000
ஆண்டிற்கான இலாபம்	-	43,635,000	43,635,000
ஏனைய முற்றடக்க வருமானம் / (செலவு)	-	-	-
செலுத்தப்பட்ட இடைக்கால பங்கிலாபம்		(15,000,000)	(15,000,000)
மார்ச் 31, 2024 அன்று மீதி	**300,000,000**	**79,635,000**	**379,635,000**

(03 புள்ளிகள்)

(d) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான குறிப்புக்கள்

Rs.

விபரங்கள்	**காணி**	**கட்டடம்**	**இயந்திரம்**	**மோ. வாகனம்**	**மொத்தம்**
01-04-2023 இல் கிரயம்	90,000,000	36,000,000	60,000,000	12,000,000	**198,000,000**
அகற்றல்கள்	-	-	-	**(6,000,000)**	**(6,000,000)**
சேத இழப்பு			(2,000,000)		**(2,000,000)**
31-03-2024 இல் கிரயம்	**90,000,000**	**36,000,000**	**58,000,000**	**6,000,000**	**190,000,000**
01-04-2023 இல் திரண்ட தேய்வு	-	15,000,000	18,000,000	5,000,000	**38,000,000**
ஆண்டுக்கான தேய்வு	-	720,000	6,000,000	3,000,000	**9,720,000**
அகற்றல்கள்	-	-	-	**(3,750,000)**	**(3,750,000)**
31-03-2024 இல் திரண்ட தேய்வு	**-**	**15,720,000**	**24,000,000**	**4,250,000**	**43,220,000**
01-04-2023 இல் கொ.செ பெறுமதி	**90,000,000**	**20,280,000**	**34,000,000**	**1,750,000**	**146,030,000**

(05 புள்ளிகள்)

குறிப்புக்கள்

1	**வருமானம்**	
	விற்பனை	**317,000,000**

2	**விற்பனைக் கிரயம்**	
	விற்பனைக் கிரயம்	**161,000,000**

3	**ஏனைய வருமானம்**	
	ஏனைய வருமானம்	1,500,000
	சொத்து அகற்றல் இலாபம்	3,250,000
	அறவிட முடியாக்கடன் மீளப்பெறுகை	1,400,000
	நிலையான வைப்பு வட்டி	250,000
	ஐயக் கடன் மிகை ஏற்பாடு (16,500 – 4,620)	11,880,000
		18,280,000

4	**நிர்வாக செலவினங்கள்**	
	நிர்வாக செலவினங்கள்	68,500,000
	கட்டடப் பெறுமானத் தேய்வு	720,000
	இயந்திரப் பெறுமானத் தேய்வு	6,000,000
	கணக்காய்வுக் கட்டணம்	800,000
	வரிக் கட்டணம்	500,000
	வாடகைச் செலவினங்கள்	900,000
		77,420,000

5	**விநியோகச் செலவினங்கள்**	
	விநியோகச் செலவினங்கள்	33,400,000
	மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு	3,000,000
		36,400,000

6	**நிதிச் செலவினங்கள்**	
	நிதிச் செலவினங்கள்	**2,375,000**

7	**வருமான வரி**	
	வருமான வரிப் பரிப்பு 2023 / 2024	12,450,000
	செலுத்தப்பட்டது	(10,000,000)
	நிலுவை	**2,450,000**

8	**நீண்டகாலக் கடன்கள்**	
	அடுத்த வருடத்தினுள் செலுத்தப்பட வேண்டியது	10,000,000
	நடைமுறையல்லாத பகுதி	40,000,000
	மொத்தம்	**50,000,000**

aat SRI LANKA

செய்கைகள்

மூலதனமாக்கப்பட்ட வட்டி	
கடன்	50,000,000
வட்டி வீதம்	15%
9 மாதத்துக்கான வட்டி (50 x 0.15 x 9/12)	**5,625,000**

இயந்திரத்தின் சேத இழப்பு	
இயந்திரத்தின் கொண்டு செல்லல் பெறுமதி	36,000,000
மீளப்பெறத்தக்க பெறுமதி	34,000,000
சேத இழப்பு	**2,000,000**

நியாயமான பெறுமதியில் அகற்றலுக்கான கிரயங்கள் கழித்த பெறுமதி (ரூபா 30,000,000) மற்றும் பாவனையிலுள்ள பெறுமதி (ரூபா 34,000,000) ஆகியவற்றில் உயர்வானது.

மோட்டார் வாகனங்கள்

மீதி	12,000,000	அகற்றல்	6,000,000
		மீதி மு. கொ. செ	6,000,000
	12,000,000		12,000,000
மீதி மு. கொ. வ	6,000,000		

மோட்டார் வாகனங்கள் திரண்ட பெறுமானத் தேய்வு

சொத்து அகற்றல் கணக்கு	3,750,000	மீதி	5,000,000
		தேய்மானம் - இலாபநட்ட	3,000,000
மீதி மு. கொ. செ	4,250,000		
	8,000,000		8,000,000
		மீதி மு. கொ. வு	4,250,000

அகற்றப்பட்ட மோட்டார் வாகனங்கள்	
கிரயம்	6,000,000
பயன்தரு ஆயுள்	4
அகற்றலின் ஆயுட்கால திகதி	2.5

மோட்டார் வாகனங்கள் அகற்றல் கணக்கு

மோட்டார் வாகனங்கள்	6,000,000	மீதி	5,500,000
இலாபம்	3,250,000	மோட்டார் வாகன திர தேய்வு	3,750,000
	9,250,000		9,250,000

மூலதனக் குறைவேலை

மீதி	95,000,000		
நிதிச் செலவினம்	5,625,000	மீ மு. கொ	100,625,000
	100,625,000		100,625,000
மீதி மு கொ வ	100,625,000		

வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

மீதி	91,000,000	கடன்பட்டோர் விடுதொகை	4,620,000
அ. மு. கடன் மீள்பெறுகை	1,400,000	மீதி மு கொ செ	87,780,000
	92,400,000		92,400,000
மீதி மு. கொ. வ	87,780,000		

வாடகை – முற்பணம்

மீதி	3,600,000	இலா-நட்ட	900,000
		மீதி மு கொ செ	2,700,000
	3,600,000		3,600,000
மீதி மு. கொ. வ	2,700,000		

aat SRI LANKA

நிதிச் செலவினங்கள்

மீதி	8,000,000	மூலதன குறைவேலை	5,625,000
		இலா-நட்ட	2,375,000
	8,000,000		8,000,000

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 09ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அத்தியாயம் 04

(a) (i) மொத்த இலாப வீதம்

மொத்த இலாப வீதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}}$ X 100

$$= \frac{361,900}{1,683,700} \text{ X } 100 = \mathbf{21.49\%}$$

(ii) நிகர இலாப வீதம்

நிகர இலாப வீதம் = $\frac{\text{வரிக்குப் பின் நிகர இலாபம்}}{\text{விற்பனை}}$ X 100

$$= \frac{136,450}{1,683,700} \text{ X } 100 = \mathbf{8.10\%}$$

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் = $\frac{\text{சராசரி வியாபார வருமதி}}{\text{கடன் விற்பனை}}$ X 365

படிமுறை 1: சராசரி வியாபார வருமதிகளின் கணித்தல்

சராசரி வியாபார வருமதி = $\frac{541,500 + 419,800}{2}$ = 480,650

படிமுறை 2: கடன் விற்பனைகளின் கணித்தல்

கடன் விற்பனை = 1,683,700 x 60% = 1,010,220

படிமுறை 3: சேகரிப்புக் காலத்தின் கணித்தல்

$$= \frac{480,650}{1,010,220} \text{ X } 365 = 173 \text{ நாள்}$$

(iv) கடன் கொடுத்தோர் செலுத்துகைக் காலம்

கடன் கொடுத்தோர் செலுத்துகைக் காலம் $\frac{\text{சராசரி வியாபார சென்மதி}}{\text{கடன் கொள்வனவு}}$ X 365

படிமுறை 1: சராசரி வியாபார சென்மதிகளின் கணித்தல்

சராசரி வியாபார சென்மதி = $\frac{115,720 + 110,910}{2}$ = 113,315

படிமுறை 2: கடன் கொள்வனவுகளின் கணித்தல்

கடன் கொள்வனவுகள் = 1,321,800 x 90% = 1,189,620

படிமுறை 3: செலுத்துகைக் காலத்தின் கணித்தல்

= $\frac{113,315}{1,189,620}$ X 365 = 35 நாள்

(v) பங்கு ஒன்றுக்கான உழைப்பு

பங்கு ஒன்றுக்கான உழைப்பு = $\frac{\text{வரிக்குப் பின் நிகர இலாபம்}}{\text{பங்குகளின் எண்ணிக்கை}}$

= $\frac{136,450}{1,189,620}$ = 6.997 (அண்ணளவாக 7.00)

விகிதங்களின் சுருக்கம்

விகிதம்	பெறுமதி
மொத்த இலாப வீதம்	21.49%
நிகர இலாப வீதம்	8.10%
கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்	173.66 நாட்கள்
கடன் கொடுத்தோர் செலுத்துகைக் காலம்	35 நாட்கள்
பங்கு ஒன்றுக்கான உழைப்பு	ரூபா 7.00

(05 புள்ளிகள்)

(b)

விகிதம்	சக்தி பி.எல்.சி (2024)	தொழிற்துறை சராசரி	வேறுபாடு
மொத்த இலாப வீதம்	21.49%	44%	சராசரியிலும் 22.51% குறைவு
நிகர இலாப வீதம்	8.10%	12%	சராசரியிலும் 3.90% குறைவு
க.ப சேகரிப்புக் காலம்	173.66 நாட்கள்	105 நாட்கள்	சராசரியிலும் 68.66 நாட்கள் அதிகம்
க.கொ செலுத்துகைக் காலம்	34.77 நாட்கள்	65 நாட்கள்	சராசரியிலும் 30.23 நாட்கள் குறைவு
பங்கு ஒன்றுக்கான உழைப்பு	ரூபா 7.00	ரூபா 7.50	சராசரியிலும் ரூபா 0.50 குறைவு

முரண்களின் பகுப்பாய்வு:

1. மொத்த இலாப விகிதம் (21.49% எதிர் தொழிற்துறை சராசரி 44%)

விளக்கம்:

சக்தி பி.எல்.சியின் மொத்த இலாப எல்லை தொழிற்துறை சராசரியை விட கணிசமாகக் குறைவாக உள்ளமை பின்வருவனவற்றைக் குறிக்கும்:

- நிறுவனம் அதிக விற்பனைக் கிரயத்தைக் கொண்டுள்ளது. இது வினைத்திறனற்ற உற்பத்தி, மோசமான வழங்குனர் பேரம்பேசல்கள் அல்லது உயர் மூலப்பொருள் கிரயங்கள் போன்றவற்றின் காரணமாக இருக்கலாம்.
- நிறுவனம் போட்டித்தன்மையுடன் இருப்பதற்காக, உற்பத்திகளுக்கு குறைந்த விலையிடலை மேய்கொள்கிறது, இது இலாபத்தை குறைக்கும்.

சாத்தியமான நடவடிக்கை:

உற்பத்தி செலவுகளை மீளாய்வு செய்தல், சிறந்த வழங்குனர் விதிமுறைகளை பேரம்பேசுதல் அல்லது விலையிடல் நுட்பங்களை ஆராய்தல்.

2. நிகர இலாப விகிதம் (8.10% எதிர் தொழிற்துறை சராசரி 12%)

விளக்கம்:

நிகர இலாப விகிதமானது பிரதானமாக குறைவான மொத்த இலாபம் மற்றும் அதிக தொழிற்பாட்டு அல்லது வட்டி செலவுகள் காரணமாக குறைவாக உள்ளது. விற்பனையை நிகர இலாபமாக மாற்றுவதில் நிறுவனம் மற்றைய நிறுவனங்களைப் போல வினைத்திறனாக இல்லை.

சாத்தியமான நடவடிக்கை:

நிர்வாக மேந்தலை, வட்டிச் செலவுகள் அல்லது உற்பத்தி வினைத்திறனின்மை போன்ற பகுதிகளை விசாரணை செய்து இலாபத்தை மேம்படுத்துவதற்கான மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்.

SRI LANKA

3. கடன்பட்டோர் சேகரிப்பு காலம் (173 நாட்கள் எதிர் தொழிற்துறை சராசரி 105 நாட்கள்)

விளக்கம்:

தொழிற்துறையுடன் ஒப்பிடும்போது வருமதிகளை சேகரிக்க சக்தி பி.எல்.சி அதிக காலம் எடுக்கிறது. இது காசுப்பாய்ச்சல் சிக்கல்கள் மற்றும் அதிக அறவிடமுடியாக் கடன்களை ஏற்படுத்தக்கூடும். இது பலவீனமான கடன் கொள்கைகள் அல்லது பயனுறுதியற்ற சேகரிப்பு நடைமுறைகளை குறிக்கிறது.

சாத்தியமான நடவடிக்கை:

கடன் விதிமுறைகளை இறுக்கமாக்குதல் மற்றும் சேகரிப்பு காலத்தைக் குறைப்பதற்காகக் கடுமையான சேகரிப்பு நடைமுறைகளை செயற்படுத்தல்.

4. கடன் கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் (34.77 நாட்கள் எதிர் தொழிற்துறை சராசரி 65 நாட்கள்)

விளக்கம்:

நிறுவனம் தனது வழங்குனர்களுக்கு தொழிற்துறை சராசரியை விட மிக வேகமாக செலுத்துகிறது. இது காசுப்பாய்ச்சல் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். நிறுவனம் வழங்குனர்கள் வழங்கும் கடன் விதிமுறைகளை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்பதையும் இது குறிக்கலாம்.

சாத்தியமான நடவடிக்கை:
தொழிற்துறை நியமங்களுடன் சிறப்பாக இணைவதற்கும் காசுப்பாய்ச்சல் முகாமையை மேம்படுத்துவதற்குமாக, வழங்குனர்களுடன் நீண்ட கடன்தவணை விதிமுறைகளை பேரம்பேசுதல்.

5. பங்கு ஒன்றுக்கான வருவாய் (ரூ. 7.00 எதிர் தொழிற்துறை சராசரி ரூ. 7.50)
விளக்கம்:
சக்தி பி.எல்.சியின் பங்குக்கான வருவாய் தொழிற்துறை சராசரியை விட சற்றே குறைவாக உள்ளதுடன், இது குறைந்த இலாபத்தன்மையைப் பிரதிபலிக்கிறது. குறைந்த நிகர இலாபம் இதற்கான முக்கிய காரணமாக இருக்கக்கூடும், ஏனெனில் இது பங்குக்காய உழைப்பை நேரடியாக பாதிக்கிறது.

சாத்தியமான நடவடிக்கை:
செலவு முகாமை மற்றும் வருமான வளர்ச்சி மூலம் ஒட்டுமொத்த இலாபத்தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 10ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அத்தியாயம் 05

(a) கன்ரிச் பி.எல்.சி (KN) கையகப்படுத்துவதிலான நன்பெறுமதிக் கணக்கீடு

விபரங்கள்	**தொகை (000)**
EN இனால் மாற்றப்பட்ட கொள்வனவுப் பெறுமதி (80%)	65,000
கட்டுப்பாடற்ற அக்கறையின் நியாயமான பெறுமதி (20%)	20,000
மொத்தக் கொள்வனவுக் கருதுகை	85,000
கழி: KN இன் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துக்களின் நியாயமான பெறுமதி (S/C 70,000+ R/E 4,500)	(74,500)
கையகப்படுத்துதலிலான நன்மதிப்பு	**10,500**

(b)

உரிமைமாற்றப்பட்ட ஆதனம், பொறி, உபகரண தேய்மானத் தாக்கம்	
5 ஆண்டுகளுக்கு ரூபா 3,000,000 மீது KN இட்ட தேய்மானம்	600
5 ஆண்டுகளில் ரூபா 2,000,000 மீதான அசல் தேய்மானம்	400
KN ஆல் வசூலிக்கப்பட்ட மிகையான தேய்மானம்	**200**

நிறுத்திவைத்த உழைப்பு	
EN	26,900
நன்மதிப்பு சேத இழப்பு	(6,000)
ஆதனம், பொறி, உபகரண விற்பனையிலான அடையப்படாத இலாபம் (3000-2000)	(1,000)
இருப்புகளில் அடையப்படாத இலாபம	(240)
சீராக்கப்பட்ட இலாபம்	19,660
KN இன் 80%	6,160
இறுதி மீதி	**25,820**

__செய்கைகள்__

சேத இழப்பிற்கு முன்னரான நன்மதிப்பு

	தொகை (ரூபா 000)
சேத இழப்பிற்கு முன்னரான நன்மதிப்பு	10,500
கழி: சேத இழப்பு (EN இன் நிறுத்தி வைத்த உழைப்பில் தாக்கல் செய்யப்பட்டது)	(6,000)
சேத இழப்பிற்குப் பின்னரான நன்மதிப்பு	**4,500**

KN – கையகப்படுத்தலுக்குப் பின்னரான இலாபம்

கையகப்படுத்தலுக்கு பின்னரான இலாபம்	7,500
பெறுமானத் தேய்வு மீளளிப்பு	200
சீராக்கப்பட்ட இலாபம்	**7,700**
கட்டுப்பாடற்ற அக்கறை (20%)	**1,540**
EN 80%	**6,160**

கட்டுப்பாடற்ற அக்கறை	
ஆரம்பக் கட்டுப்பாடற்ற அக்கறை (கையகப்படுத்தலின் போது)	20,000
KN – கையகப்படுத்தலுக்குப் பின்னரான இலாபம்	1,540
இறுதிக் கட்டுப்பாடற்ற அக்கறை	**21,540**

இருப்பில் அடையப்படாத இலாபம்	
KN கொள்வனவு செய்த பொருட்கள்	6000
விற்கப்படாது மீதமாயிருந்த இருப்பின் 1/5	1200
கிரயத்தில் 20% இலாப எல்லை	**200**

என்ரிச் பி.எல்.சி குழு
மார்ச் 31, 2024 அன்று உள்ளவாறான
ஒன்றித்த நிதிநிலைமைக் கூற்று

	தொகை (ரூபா. 000)
சொத்துக்கள்	
நடைமுறையல்லா சொத்துக்கள்	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (90,000 + 60,000 – அடையப்படாத ஆ.பொ.உ ரூ. 1,000 + மீளளிக்கப்பட்ட தேய்மானம் ரூ. 200)	149,200
நன்மதிப்பு (சேத இழப்பின் பின்னர்)	4,500
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்	**153,700**
நடைமுறைச் சொத்துக்கள்	
இருப்புகள் (12,000 + 18,000 - அடையப்படாத இருப்பு இலாபம் 240)	29,760
வியாபார மற்றும் பிற வருமதிகள் (18,000 + 17,000)	35,000
காசு மற்றும் காசுக்கு சமமானவை (6,000 + 2,500)	8,500
மொத்த நடைமுறை சொத்துக்கள்	**73,260**

மொத்த சொத்துக்கள்	**226,960**
உரிமையாண்மை மற்றும் பரிப்புகள்	
உரிமையாண்மை	
கூறப்பட்ட மூலதனம்	120,000
நிறுத்திவைத்த உழைப்பு	25,820
உரிமையாண்மை	145,820
கட்டுப்படுத்தாத அக்கறை	21,540
மொத்த உரிமையாண்மை	**167,360**
நடைமுறையல்லாப் பரிப்புக்கள்	
ஊழியர் பயன்கள் (7,500 + 3,100)	10,600
மொத்த நடைமுறையல்லாப் பரிப்புக்கள்	**10,600**
நடைமுறைப் பரிப்புக்கள்	
வியாபார சென்மதிகள் (32,000 + 9,050)	41,050
சென்மதியான வருமான வரி (6,600 + 1,350)	7,950
மொத்த நடைமுறைப் பரிப்புக்கள்	**49,000**
மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்	**26,960**

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி **C** முடிவு*

Notice:

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)